# இராமானுஜரும் கோட்பாடுகளும்

- வைணவத்தின் பரவல்
- இராமனுஜர் பாரததேசம் முழுவதும் யாத்திரை செய்து வைணவத்தின் பெருமையை எங்கும் பறை சாற்றினார்கள்
- எதிர் வாதங்கள் புரிந்தவர்களை வென்று வைணவ மடங்களை நிறுவினார்
- சில இடங்களில் ஆன்மீகத்தில் பிடிப்பு இருந்தும் இல்லறத்திலேயே இருக்க விரும்பியவர்களையும் தன் மடங்களின் ஆன்மீகத் தலைவர்களாக்கினார்.
- திருவரங்கத்திலுள்ள தலைமை மடத்திற்கு மடாதிபதியாக வரவேண்டிய விதி முறைகளை வழிப்படுத்தினார்.
- ஒவ்வொருவரிடமும், முக்கியமாக தாழ்த்தப்பட்ட இன மக்களிடையேயும், இரக்கம், கருணை, பரிவு முதலிய நற்குணங்களைச் சொரிந்ததோடு ”திருக்குலத்தார்” என்றும் அவர்களை அழைக்கலானார்.
- இராமானுஜரின் இக்குணத்தால் கவரப்பட்டே பின்னர் வந்த காந்தி மகானும் ”ஹரிஜன்” என்றார்.
- தமிழ் பிரபந்தங்களை ஓதவும் வைணவச் சின்னங்களை தரிக்கவும் எந்தச் சாதியினரோ ஆணோ பெண்ணோ எல்லோருக்கும் வைணவத்தில் இடம் இருக்கச் செய்தார்.

## இராமனுஜா் அருளிச் செய்த நூல்கள்:

- வடமொழியில் இராமானுஜா் இயற்றிய ஸ்ரீபாஷ்யம் அவருடைய தலைசிறந்த படைப்பு.
- வேதாந்தத்தில் விசிஷ்டாத்வைத தத்துவத்தை காலத்திற்கும் நிலை நாட்டிய நூல் ஸ்ரீபாஷ்யம் ஆகும்.
- வேதாந்த சங்கிரகம் - இது உபநிடத தத்துவங்களை விவரித்துச் சொல்கிறது.
- இராமானுஜா் அருளிச் செய்த வேதாந்த சாரம், மற்றும் வேதாந்த தீபம், இவை பிரம்ம சூத்திரத்தைப் பற்றிய சுருக்கமான உரைகள்.
- கீதா பாஷ்யம், இது கீதைக்கு விசிட்டாத்துவைத்தையொட்டி இராமானுஜரால் எழுதப்பட்ட உரையாகும்.
- இராமானுஜரின் நித்யக்கிரந்தங்கள் அன்றாட வைதீக சடங்குகளும், பூசை முறைகளாகும்.
- இராமானுஜா் அவருடைய சொற்பொழிவுகளை தமிழில் செய்தாலும் தமிழில் அவா் எழுதியதாகத் தெரியவில்லை.

## ஆச்சாரிய பரம்பரை:

- ஒன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்த நாதமுனிகள் என்ற முதல் ஆச்சாரியா் அடங்கிய குரு பரம்பரையில் ஆளவந்தாருக்கு அடுத்து வந்தவா் இராமானுஜா்.

- ஸ்ரீவைணவப் பண்பாட்டில் ஆழ்வார்கள் பன்னிருவரும் மக்களின் இதயத்தைத் தொடர்ந்து மனதை மாற்றியவர்கள்.
- ஆச்சாரியர்களோ புத்தி பூர்வமாக மனதைத் தொட்டவர்கள்.
- பல நூற்றாண்டுகளுக்கு முன் புவியில் உலாவிய ஆழ்வார்களின் பிரபந்தங்களை நாதமுனிகள் தான் தமிழ்நாட்டில் தேடித்தேடி வெளிக் கொணர்ந்தார். மேலும் பாசுரங்களை இசைக்குகந்ததாக ஆக்கி எல்லா இடங்களிலும் பரப்பினார்.
- யோக சக்திமூலம் நம்மாழ்வாரிடமிருந்து பிரபந்தங்களை நேரடியாகப் பெற்றார் என்பது ஸ்ரீவைணவர்கள் நம்பிக்கை.

## நிர்வாகி

- இராமானுஜர் சிறந்த வேதாந்தி மட்டும் அல்ல பெரிய நிர்வாகியும் கூட.
- திருவரங்கம் கோயிலின் நிர்வாகத்தை ஏற்று அதை முற்றிலும் சீர்படுத்தி அன்றாடம் நடக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை உண்டாக்கினார்.
- தற்கால ஸ்ரீவைணவ நடைமுறைகளை உருவாக்கி சடங்குகளோ, சம்பிரதாயங்களோ, பழக்க வழக்கங்களோ எல்லாவற்றிற்கும் கருத்துச் செறிவுடன் உயிர் கொடுத்தவரும் இராமானுஜரே.
- திருவரங்கம் கோயில் உடைமைகளை சிறப்புற மீட்டெடுத்து நிர்வாகம் செய்ததால் திருவரங்கநாதன் இராமானுஜரை ”உடையவர்” என அழைத்தார்.

## மூன்று திருமேனிகள்

- வைணவப் புரட்சித் துறவி இராமானுஜரின் மூன்று திருமேனிகள் புகழ்பெற்றவையாகும்.
    1. தமர் உகந்த திருமேனி (மேல்கோட்டை என்ற திருநாராயணபுரம், மைசூர்)
    2. தானுகந்த திருமேனி (ஸ்ரீபெரும்புதூர்)
    3. தானான திருமேனி (ஸ்ரீரங்கம்)

------****-----****----